உ

6676

கடவுள் துணை.

மதுரை

மீநாக்ஷி வெண்பா மாலை

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS

இஃது

பெங்களூர் ஸிவில் அண்டு மிலிடெரி ஸ்டேஷன்,

ஸ்கூல் ஸப் அஸிஸ்டண்டு இன்ஸ்பெக்டர்

திருவெண்காடு, சுவேதாரணிய சாஸ்திரியால்

இயற்றப்பட்டு,

இராவ்பஹதூர் ஆறுகாடு,

மெய்கண்டதேவ முதலியாரவர்களால்,

பெங்களூர்

நாஷனல் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

1906.

விசுவாவஸு௵ தை௴.

6676

உ

மீனாக்ஷி வெண்பா மாலை.

MAHOPADHYAYA
V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

காப்பு.

ஆறிரண்டு கைப்பாலே னை செலுத்தியருள்
வீறுகொண்ட மீனாக்ஷி மைந்தன் கழன்மேற்—பேறுறவான்
பத்தியினால் யானுமொரு மாமாலை சூட்டுவல்
சித்திநலங் கைவரப்பெற்றுச் சேர்ந்து.

பூவா லணியன்பர் புன்பிறவி யின்றொருகான்
மேவா வகையருளு மீனாக்ஷி—தேவாரப்
பாவுகப்பாய் செஞ்சொற் பலவுகப்பா யொன்றறியேன்
நாவுகப்பா யன்னே நயந்து (1)

உள்ளக் கனிவுடைய உத்தமரைத் தன்கருணை
வெள்ளத் தினிதிருத்து மீனாக்ஷி—எள்ளளவும்
தூய்மையிலே னுய்யத் தொழுதேன் மதுரைக்குச்
சேய்மையெனினு நீயே திருத்து. (2)

ஓதச் செவிக்கினிய உய்த்துணரத் தேனூறும்
வேதப் பொருளவடிவாம் மீனாக்ஷி—பேதைச்
சிறியேனை யன்னை திரிவேனை நன்மை
யறியேனை யாளவா யறிந்து. (3)

சொல்லக் குறையில்லை சுட்டப் பொருளில்லை
வெல்லப் பகையில்லை மீனாக்ஷி—அல்லைப்
பகலாக்கு மூக்குத்தி பார்த்தபேர்க் கென்றும்
நிகராவார் யாரே நிகழ்த்து. (4)

நாலாங் கவிவல்லார் நாலாம் பதவி யெய்தி
மேலா யிருக்கவருள் மீனாக்ஷி—தோலாத
நாவலிமை செல்வம் நடுநிலைமை ஞானநிறை
பாவலிமை யீவாய் பரிந்து. (5)

காசியொளி யுள்ளருளை கண்ணவைவெண் காடுசெவி
வீசியொளிர் முத்தணியு மீனாக்ஷி—தேசுறுப
ஊணறிவின் மாமதுரை ஒன்றுரைநா நீரூறும்
பூணறிவில் பேதை புகல். (6)

பான்மை நினைக்குமுனம் பைம்பொற் கிரிவரிசை
மேன்மை தனைக்காட்டு மீனாக்ஷி—தேன்கமழும்
கோங்கார வில்வங் குளிர்கடப்பங் காட்டிடையே
ஓங்கார மாறு யுகந்து. (7)

அஞ்சும் படிநடுவன் அன்றெனக்கு வாராமல்
மிஞ்சுங் கடைக்கணருள் மீனாக்ஷி—புஞ்ச
வுரையுணரான் செம்மை யொழுக்குணரான் பாவ
வரையுணரா னென்றே மதித்து. (8)

காணப் பிறபுலனுங் கண்ணும் பரிசெதற்கும்
வேணிப் பரனுக்கு மீனாக்ஷி—மாண்பச்சை
வாண்முகத்து மின்னும் வயங்கொளிமீ னுங்கெனக்குக்
கோண்முகத்த வெல்லாங் குணம். (9)

வல்லாற்கு மேருமலை வாழ்சார னேற்றதனி
வில்லாற்கும் வேண்டியருள் மீனாக்ஷி—யெல்லார்க்கும்
தாயான தன்மை தனைநினைத்தே யிங்கெளியேன்
நாயாய்க் குழைவே னயர்ந்து. (10)

கண்கலங்கி மெய்ம்மறந்து கட்டழியும் வேளையிலே
வெண்கலங்கி னென்றொலிக்கு மீனாக்ஷி—பண்கலந்த
வேதநுவல் வாயால் வெருவே லெனவருளிப்
போதநுவல் கின்றேன் புரிந்து. (11)

பிஞ்சிகையா லெவ்வுலகும் பேதுறநின் றூட்டிமகிழ்
விஞ்சைதனை யானுணரேன் மீனாக்ஷி—நெஞ்சுருகிக்
கண்டளும்ப மெய்பொடிப்பக் கைகூப்பி முன்னிலைக்கே
தண்டெனவீழ்ந் தாலோ தயை. (12)

முன்னியற்றும் பின்னுழலு மூட மடநெஞ்சம்
மின்னியல்பூ ணாங்கிறை மீனாக்ஷி—முன்னிலையா
லென்னுறவா மென்காஞ்சி யின்றுறைதேர்ந் தோதவருள்
உன்னும மொன்றே யுகந்து. (13)

கூறநிலை யெற்பிழிநாற் கோலநிறை வீதிநதி
வீறுநிலை கூடனகர் மீநாக்ஷி—தேறுநிலை
நீயே யெனவுரைக்கு நீண்மறையி னந்தமெலாந்
தாயே கழல்பணிந்தேன் தாழ்ந்து. (14)

சொல்லியலு நன்மையெலாந் தொக்க வருட்கடல்சீர்
மெல்லியலாம் பிரமவித்தை மீநாக்ஷி—வல்லியமாம்
ஆணவந்தான் குன்றி யடங்கும் பெரியோர்க்குக்
காணவந்தா யுண்ணலமே கண்டு. (15)

பண்பா வெழுசுவையாற் பண்பாம் புகழ்பெயரை
விண்பார் மகிழ்ந்தேத்து மீநாக்ஷி—கண்பாராய்
வல்வினையாம் பேரலைக்கே வாளா வெழுந்தழுந்திப்
புல்லறிவா னெய்தநேன் புகுந்து. (16)

பூதத்துண் மண்ணதிகம் மண்ணிற் புனலதிகம்
மீததற்கு நெல்மேலா மீநாக்ஷி—யோதுமுறை
நெல்லுணவு வான்புருடன் நேர்வாக்கு மாமறையோம்
சொல்லுயரு மற்றதநின் சுட்டு. (17)

அற்புதம்பல் காலுறமு வஃதடங்கா வான்றிரளை
வெற்பதன்கண் மெய்ந்நிலைச்சேர் மீநாக்ஷி—பொற்பமரும்
அற்றை மணங்கண்டா ரன்னோர்க் கொருவனென
வெற்றைச் சனைப்படுவேன் யான். (18)

பேதந் தவிர்மிடற்றன் பீடையொழி மிடற்றன்
வேதம் புகழ்மிடற்றன் மீநாக்ஷி—யேதமிலா
மைம்மிடற்றன் பாக மகிழ்ந்தாய் புணையன்றிக்
கைம்முடவற் காமோ கதி. (19)

கண்டா ரிருளகலக் காந்தியருள் வீசிநிறை
விண்டாரை நேர்வாயின் மீநாக்ஷி—கொண்டாடும்
மூலலிங்க வானுருவ முற்றும் பணிந்தவர்க்கெக்
காலுமெங்கு முண்டோ கவல். (20)

எட்டாம் படிகடந்தா னெள்ளளவும் பற்றின்றி
விட்டா னுளமகிழு மீநாக்ஷி—பட்டாருங்
கெட்டாரும் விட்டாரும் கேட்க வினிதருள்வாய்
மட்டாரு மில்லா வணம். (21)

காலுண்டு நீராடிக் கானலைந்து நீள்குகைபோய்
மேலணிநீ றியாதுபயன் மீநாக்ஷி—யாலமுகு
வெய்யரவ மீன்கடுவாய் வெள்ளெலிகா யுற்றனவோ
மெய்யறிவை யில்லாமை வீண். (22)

பால்வடியும் வாயான் பரஞான சம்பந்தன்
மேல்பொருள்பாய் பாவிரும்பு மீநாக்ஷி—சால்பிடித்துக்
கொஞ்சு மிளங்குழந்தை கோல முகநோக்கி
யஞ்ச லெனவுரைப்பா யாங்கு. (23)

போம்வெளியின் மீண்டுபுகும் பொற்பறற் சிறையன்னம்
மேம்பெயரே மந்திரமா மீநாக்ஷி—யோம்படையால்
மித்தை வலைநீங்கி மேல்யோக முற்றார்க்கு
முத்திநெறி காட்டு முதல். (24)

மாணிடைக்கும் பிங்கலைக்கும் மன்னுமிடை பேரொளிசூழ்
வேணிசங்க மங்குலவு மீநாக்ஷி—பேணவருள்
கேதாரங் கங்கைமணி கர்ணிகையுங் சேழ்வரையும்
ஆதார மாத லறிந்து. (25)

உள்ளிருக்கு மாமணியை யுள்ளவகை காட்டுமுரு
வெள்ளொருக்கு வேணியன்பான் மீநாக்ஷி—கொள்ளலையேல்
ஞானம் வெளிப்படுமோ ஞால முயுந்திறமோ
பானை விளக்கொளியே பார். (26)

நிணெருப்பு தானடங்க செய்சொரிதல் துய்ப்பதருள்
வேணவா வேயுமெனல் மீநாக்ஷி—பூணரிய
நற்றுறவே யுற்றதுணை நாணிலத்துக் கோலமமர்
மற்றுறவா லென்னபயன் மண். (27)

சஞ்சலத்தாற் புல்லறிவாற் றூழ்வினைசெய் பேதைமையால்
வெஞ்சலத்தா லுள்ளுடைந்தேன் மீநாக்ஷி—மிஞ்சலெத்தால்
முன்வகுத்த வாறமையு மென்னு முறையுணரா
வென்முகம்பார்த் திப்போ திரங்கு. (28)

வாய்ந்தகுரு வின்மொழியே மாயை யொழிக்குநிம்பம்
வேய்ந்துலகு தானடத்து மீநாக்ஷி—ஆய்ந்தரசென்
அம்மொழியே நின்னுருவ மாதலினு னின்னையன்றி
மம்மரற வுண்டோ மருந்து. (29)

பொன்னிற் பலகாற் பொலிந்துமணம் வீசழகார்
மென்கொன்றை மாலையணி மீனாக்ஷி—தென்கூடல்
செங்கோல் செலுத்தித் திறல்கொண்டாய்க் காட்பட்டால்
எங்கே யிருந்தாலு மென். (30)

செந்நீர்க்குத் தூய்மை சிறந்தவில்லை முண்டாக்கு
மென்னீரின் மெல்லியலா மீனாக்ஷி—யுன்றுமம்
நண்ணிட வாக்கு நயமில்லாப் பேதைகுணம்
என்னீர வேனு மிருத்து. (31)

கேடெத்தால் வேருன்றுங் கீழ்வினையா லிவ்வுலக
வேடத்தால் உள்மகிழ்மே மீனாக்ஷி—ஆடத்தான்
ஆட்டிவைத்தால் வேண்டுமே யம்பலத்தே தண்ணருளாற்
காட்டிவைத்தாற் காண்பன் கழல். (32)

ஆயிடைநற் பன்மணியை யண்ணனொடு வீதிவிற்க
வேயிடைவாண் முத்துவக்கு மீனாக்ஷி—பேயடையும்
வெய்யவிட மாடும் விமலன் றனையடைந்தாய்
மெய்யுணர்த லெப்படியு மேல். (33)

எண்சுமந்த நற்பெயரா னென்று மனமுருகி
விண்சுமந்த வேந்துதொழு மீனாக்ஷி—மண்சுமந்தும்
பந்தத்து நில்லாது பால்விடைமேல் ஏறிநின்றீர்
வந்தித்த வந்திக்கு வாது. (34)

கண்மணியை பொன்மணியைக் கற்பகத்தை வித்தைதனை
விண்மணியைத் தண்கதிரை மீனாக்ஷி—யுன்மணியைப்
பண்ணுநும் பாடற் பரிசறியு நின்வணங்கக்
கண்ணூரக் கண்டேன் களித்து. (35)

எண்ணியவை யெண்ணியவாங் செய்த லரிதாமோ
விண்ணிழியு மஞ்சமொளிர் மீனாக்ஷி—தண்ணளியால்
வற்றா வளநல்கும் வான்சங்கந் தான்தழைத்த
பொற்றா மரைத்தண் புனல். (36)

எண்ணீற்றி னீறா மிதன்பெருமை யென்னமறை
வெண்ணீற்றை யேபுகழு மீனாக்ஷி—ஒண்ணீற்றைப்
போற்றுமுறை யாற்பூசும் புண்ணியர்க்கிங் கேதுபயம்
கூற்றுவன்முன் கட்டுரைத்த கூற்று. (37)

மாளும் அழிக்கு வரையறையே யில்லையுயி
ரீளும் வழிக்குமஃதே மீனாக்ஷி—கேளாத
மந்த னுலகுவக்கு மற்றையன்றோ சொல்விடைவாய்
ஐந்தெழுத்தைச் சொல்லு மமர்ந்து. (38)

செம்பொருளான் மிக்கமறை செய்யமழலைக்குமரன்
வெம்பொருள்சீ ராய்ந்துரைத்தான் மீனாக்ஷி—தபொருளாம்
பச்சைக் குழந்தையுரைப் பண்புகந்தீர் முத்தமிட்டீர்
விச்சைக்கே யேற்ற வியப்பு. (39)

பேதை வினையென்னும் பேராற் றிடைக்குறைசேர்
வேதனையூ மென்றகலு மீனாக்ஷி—ஆதிநதி
காணும் வரைமகளாய்க் கண்ணுதலா னென்கயிலை
வாணன மகிழ்மயிலே வாய்ந்து. (10)

செய்வினையா லில்லை செறிபயனு மில்லைநிறை
மெய்யுருவா லில்லையொப்பு மீனாக்ஷி—ஐயமுண்டோ
தாயாகி வேறுநின்ற தன்மையா லுள்ளுறைபு
நீயே யுவமை நினக்கு. (41)

சாணேற விங்கு முழஞ்சறுக்கித் தாழ்ந்தெளியேன்
வீணே கலங்கவோ மீனாக்ஷி—காணுதேன்
உள்ளத்தை யுள்ளவா ஓர்ந்தாய்க் குரைப்பதென
வெள்ளத்தைத் தாண்டும் வினை. (42)

கண்டுருகு நெய்யுருகுங் கல்லுருகு மண்ணுருகுமே
விண்டுருகு மெஃகுருகு மீனாக்ஷி—கண்டுருகா
தொன்றுண்டு கண்டா யுலகி லெளியனுளம்
நன்றுண்டு கொலலோவிந் நாய்க்கு. (43)

கால்மாறிப் பல்பிறப்புங் கண்கெட்ட வெற்குமுண்டோ
வேல்மாறன் பெணமணியா மீனாக்ஷி—கால்மாறி
மன்றாடு மண்ணற்கு வாழ்க்கைப் படுமன்னே
மன்றாடி வேணடின் வரம். (14)

கால்வா யரைவாய் கலையறிவில் யாரேனும்
மேல்வா யிலரேனு மீனாக்ஷி—காலாரக்
குங்குமத்தாற் சார்வார் குறைநீங்க குவரென்றோ
...கால் வெல்வா ரெதிர்க்கு. (·5)

சாந்த குணம்பொருந்தித் தண்ணீ ரினிதருந்தி
மீந்தவிளம் புல்லுணுமான் மீனாக்ஷி—மீந்தோலின்
மீதுட்கா ரந்தணர்தாம் மேன்மை யடைவரெனறும்
சாதுக்கள் சார்பே தரும். (46)

சிக்காமற் காப்பாய் செறியுடல மையமர்ந்து
விக்காமு னேத்துகின்றேன மீனாக்ஷி—சொக்காரும்
பால்வண்ணர் பாகம் பயிலுமையே யின்றொருகால்
நால்வண்ண சால நுழைந்து. (47)

பாம்பணியும் பித்தற்குப பித்தந் தணிக்கவல்ல
வேம்பணியும் நின்னையலலான் மீனாக்ஷி—தாம்பணிந்து
கண்ணுதலை யாருங கருதுவரோ கற்புடைய
பெண்டிரால் வந்தடைந்த பேறு. (48)

தோண்டப் புனலூறும் சொல்லச் சுவையூறும்
வேண்டக் கவியூறு மீனாக்ஷி—பூண்டவன்பி
னெஞ்சூற வூறு நினைக்கரிய வானந்தம்
அஞ்சூற வூறு மது. (49)

நெஞ்சமர வுள்ளி னிறைமறலி தூதுவர்தம்
வெஞ்சமரி லஞ்சலுண்டோ மீனாக்ஷி—எஞ்சவிலா
வாளுங கதையு மழுப்படையுந் தோமரமும்
நாளுந் தொழுதோது நா. (50)

தானென் பதன்பொருளைத் தக்க விலக்கணையான்
நீநெறிக்கே செல்லுமெனப மீனாக்ஷி—நானனையே
மேதை பெலும்புதிரம் வெள்ளைநரம் பியானென்பேன்
பேதையுரை யெல்லாம் பிதற்று. (51)

கேண்மோ மதியில்லாய் கெட்ட வினிப்போதும்
வீணமோக நீங்கியுய்வை மீனாக்ஷி—தாண்மேலே
எல்லையிலா தன்புவைக்க வென்றுங குறையில்லை
தொலலைவினை துய்த்தே தொலை. (52)

மல்லல் வரைமகளே மன்னுசுடர் சுற்றுமலை
வில்லன் பரங்காண மீனாக்ஷி—பல்வகைநீ
நோற்றதே நோற்பா நுவலின் வரனவனே
ஏற்றபயன் நோற்பே இடும். (53)

ஏழை யுளவயலை யேற்ற மதியென்னு
மேழியினா னன்குழுது மீனாக்ஷி—யாழுமன்பாம்
நீரைந் தெழுத்திட்டு நீள்சிவமா மோங்குபயிர்
பாரெங்கு மெல்லாம் பரந்து. (70)

கோடி யிளங்கதிர்தாங் கூடி விளங்குமையே
வேடுருவாய் வந்ததொன்றோ மீனாக்ஷி—நாடரிய
அண்ணறனை வில்லா லடித்தான் பிழைபொறுக்க
எண்ணருஞ்சொல் ஓதினை யேற்று. (71)

கூடுமைவர் கூட்டுறவாற் கூறு மறநெறிக்கே
மேடுபள்ள மொன்றறியேன் மீனாக்ஷி—கூடனகர்
ஆண்டாய் எளியநெஞ்சை யாள்வாய் ஒளிர்தரளம்
பூண்டாய் நினதாள் புணை. (72)

ஓடுசா லல்லா விருகரையு மோங்குவெள்ளம்
வீடுகால் வெற்பிலையே மீனாக்ஷி—நீடுகால்
பாவெள்ளத் தூயோர் பகர்தமிழை யோர்ந்தவைகை
தூவெள்ள மோடிவரச் சொல். (73)

கொஞ்சுங் குலவுங் குதித்தோடும் விற்பாயும்
மிஞ்சுஞ் சுவைபொழிபு மீனாக்ஷி—புஞ்சமறைச்
சம்பந்தன் வண்டமிழின் றன்மை நிறைவைகை
அம்புதிபோற் பொங்கிடவே யார்ந்து. (74)

அம்மே யெனும்வா யசையுமுன்னே யங்கிருந்து
விம்மே லெனவருளு மீனாக்ஷி—இம்மையே
நன்மை தருவாய் நயந்தவர்க்குத் துன்பமுண்டோ
நன்மையே நன்மைதரு நன்கு. (75)

வானெருக்கு மாலை வணமுயர்பொற் கொன்றையொக்கு
மேனியன்செம் பாகமகிழ் மீனாக்ஷி—ஆணவுண்மை
சங்கையற்றார் பொய்ப்புலனைச் சார்வரோ தூய்மைமிக்க
கங்கையுற்றார்க் கங்கணமோ காண். (76)

ஒற்றிகொண்டாற் கொண்டாய் உலகமெலாங் கூடனின்று
வெற்றிகொண்டாய் மேன்மைகொண்டாய் மீனாக்ஷி—நீற்றிகண்டாய்
மற்றழியும் வேளையிலே மன்னுபரன் றன்னுடனே
(77)

ஆழ வுணர்ந்தடங்கி யாங்கார மென்னுமத
வேழமதை மாய்சிங்கம் மீனாக்ஷி—யேழுலகும்
கண்டார் நடுக்கமுறார் கைதொழுவார் ஈதன்றோ
மண்டேனின் ஞானத்து மாண்பு. (78)

முன்னறியேன் பின்னறியேன் முற்ற முழுமூடன்
மின்னெறிக்கும் பூணணியு மீனாக்ஷி—யென்னுரைக்கேன்
வீட்டிச்சை பந்தம் விளைக்குமேற் சங்கற்பக்
கூட்டிச்சை யோகோ கொடிது. (79)

சண்டிக்குந் திண்ணற்குங் கண்டற்குந் தக்கவிறன்
மிண்டற்கு முத்தியருள் மீனாக்ஷி—திண்டிறன்மெய்ஞ்
ஞானமன்பு தூய்மை நலமில்லே னுய்தலெற்றோ
கானவன்பா லுண்டோ கனி. (80)

சித்தத்தை யுன்பாற் செலுத்த மருளுலகம்
மித்தையெனு நுண்ணுர்வா மீனாக்ஷி—புத்தமுதம்
பன்னிரண்டைத் தாண்டிப் பனிமதிபா லுற்றார்க்குப்
புன்னரக மாமோ புகல். (81)

ஏழிசையா லின்பெயரை யேற்றிப் பருந்துயர்ந்து
வீழிசையா லுள்ளமகிழ் மீனாக்ஷி—தாழிசையா
னேரிசையாற் சங்கத்தார் நின்னைப் பணிந்துயர்ந்தார்
ஆரிசையா லுள்ளுருகா தார். (82)

வேதியிலே பித்தத்தை வீட்டினரை முச்சந்தி
வீதியிலே விட்டுவிட்டாய் மீனாக்ஷி—தீதறத்தான்
கங்கையிலே மூழ்கவிட்டாய் காணிற் கருணையன்றோ
செங்கையிலே தீயுற்றார் சேர்பு. (83)

தானே தனிமுதலாந் தாணுலிங்க மன்விளங்க
மேனுகரு மின்பமுற்றேன் மீனாக்ஷி—யானமறை
யோதிப் பரவசமாய் உள்மகிழ வந்தணைந்து
பூதிப் பிடியளித்தான் போந்து. (84)

கண்ட மழலிங்கம் கள்ள மனங்கவர
விண்டதே மேல்வினைதான் மீனாக்ஷி—கொண்டதேன்
செங்கரும்பு பாலாட்டிச் சீருற் றொளிவிளங்கக்
கொங்கரும்பு மாலையுடன் கூர்ந்து. (85)

நீரிட்டும் வெய்ய நெருப்பிட்டுந் தாவில்சீர்
வேரித் தமிழ்புகழு மீனாக்ஷி—பார்தொட்டுக்
காலடங்கி விண்போங் கடுங்காவ லென்றுவிடும்
நூலடங்கா வன்னே நுவல். (86)

மேலை யறியார் விரும்புமய லிவ்வுலக
வேலை பழுதன்றோ மீனாக்ஷி—சாலவுறு
வாழ்க்கைப் பயனென்னும் மாய்பனிவாய் பைங்கூழே
வாழ்த்தவரும் செங்கதிரின் மாண்பு. (87)

ஆம்பிணிதா னுயிரனா ளாழ்ந்து மகற்றுநில
வேம்பன்றோ நீள்வினைக்கு மீனாக்ஷி—தாம்பணிவார்
மேலோங்குந் தன்மை மிகத்தெளிவாம் சிற்றுயிர்க்கும்
நூலோங்க ளுரை நுவல். (88)

நாடி வகையுணரு நாடு நகைசெய்யும்
வீடுகட்டு தேர்ச்சியுண்டு மீனாக்ஷி—ஓடுமியல்
வாசி நிலைநிறுத்தும் வண்ண மிகத்தீட்டும்
காசியுள்ளே காணுங் கவி. (89)

பெற்ற பயனிற் பெரிதன்றோ பேசுங்கால்
வெற்றுடல்வாழ் செல்வமுற்றேன் மீனாக்ஷி—வெற்றுரைகேள்
கூன்மாறற் குற்ற கொடுவினைதீர் கோநகரா
நான்மாடக் கூட னயந்து. (90)

நேத்திரத்தாற் காண்டுமென்பார் நேருந் திரணெருக்கம்
வேத்திரத்தா னந்திதள்ள மீனாக்ஷி—மாத்திரத்தார்
நான்மறையி னுயகமாய் நாப்பண் ஒளிர்பகுதி
தான்முழங்கு மாக்கயிலை சால்பு. (91)

மேலை வினையலையா மீளும் பிறப்பிறப்பு
வேலைமயல் கள்மயக்கா மீனாக்ஷி—கோலமுறு
காட்சி கனற்புனலாங் காம மரவெயிற்றும்
ஆட்சிசெயு மைவர்க் கரண். (92)

போதப் பொருளெய்தப் பொய்யா வமுதமழை
வேதத்தின் வேறில்லை மீனாக்ஷி—ஆதித்தன்
மேலொளிக்கு நேருண்டோ மெய்யுணர்வை யில்லேற்குத்
[illegible] (93)

6676

பேச்சினாற் பொய்மை பிடியடங்கா [illegible]ண்மை
வீச்சினா லுய்திறமோ மீனாக்ஷி—மூச்சினா
லேறலா மோரா யிரமீ ரயுதமொடு
நூறறுகான் மேன்மை நுவன்று. (94)

போற்றுகுரு வின்னுரையாற் போதப் பொருள்விளங்கும்
மேற்றெரிய வொன்றில்லை மீனாக்ஷி—சாற்றுமறை
காண்குருவே சாக்ஷாத் கடவுள் வடிவமென்னின்
மாண்குருவாந் தாயே வழி. (95)

போற்றினா லான்மாவைப் புண்ணிய னாகின்றான்
வேற்றுமை தானொழிந்தான் மீனாக்ஷி—தோற்றமுடி
வற்றான் அளவிறந்த ஆநந்த மேயுற்றான்
பெற்றான் பெறற்கரிய பேறு. (96)

தன்னை மறந்தெவையுந் தானாய் விளங்குதற்கு
வெண்ணிடுமே மற்றையின்ப மீனாக்ஷி—முன்னரிய
நன்றே பரம்பொருளே நன்மையெலாஞ் சேர்ந்தகுணக்
குன்றே யெனையாள் குறித்து. (97)

மாணும் பிரமவித்தை மன்னுபுர சுந்தரியே
வேணுவிசை யின்மொழியாய் மீனாக்ஷி—பூணும்
சிவகாமி செய்ய வபிராமி ~~[illegible]~~ செல்வ
அவிநாசி யன்னே யருள். (98)

உள்ளம் பிரமபுர மோர்தகர புண்டரிகம்
வெள்ளிமன் றாடிமகிழ் மீனாக்ஷி—கள்ளவிழும
பொன்கொன்றை சூடும் புராரி யிடமமர்ந்தாய்
நன்கொன்றை யீவாய் நயந்து. (99)

ஆமிசைவாய் நற்புலவர் ஆநந்தங் காப்பமற்று
மீமிசைவாய் பேதையுரை மீனாக்ஷி—தாமிசையு
மன்பா லுளறியசொ லஞ்செவியி லேற்குமென்றே
யுன்பாத முற்றேன் உகந்து. (100)

திருச்சிற்றம்பலம்.

Printed at the National Press, Bangalore.

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LI… THIRUVANMIYUR